بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *18/07/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- **மக்கா வெற்றி தொடர்பான சம்பவங்களில் ஈமானுக்கு ஒளியூட்டக்கூடிய பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்**
- **பிரிட்டன் ஆண்டு மாநாடு தொடர்பாக துஆவுக்கான கவனமூட்டல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

இன்றும் மக்கா வெற்றியின் சம்பவங்களைக் குறித்து மேற்கொண்டு விபரத்தை எடுத்துக் கூறுவேன். பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவில் தங்கிய கால அளவைக் குறித்து கருத்து வேறுபாடு காணப்படுகிறது. புகாரியில் இடம்பெற்றுள்ள அறிவிப்பில், பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவில் 19 நாட்கள் தங்கி இருந்தார்கள் என்றும் அன்னார் இரு ரக்அத்கள் தொழுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. அதாவது தொழுகையை கஸ்ர் செய்து தொழுவார்கள். சில அறிவிப்புகளில் 18 என்றும் 17 என்றும் 15 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**சில மேற்கத்திய வரலாற்றாசிரியர்களும் மக்கா வெற்றியைக் குறித்து தம் நூல்களில் எழுதியுள்ளார்கள். உதாரணமாக, வில்லியம் முயர் (William Muir) என்பவர் ஒரு பிரபல்யமான மேற்கத்திய வரலாற்றாசிரியர் ஆவார். அவர் ஸ்காட்லாண்டைச் சார்ந்தவராவார். THE LIFE OF MUHAMMAD என்ற தன் நூலில் மக்கா வெற்றியை பற்றி எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதுகிறார்:** ‘(மக்காவாசிகளின்) கடந்த கால அனைத்து பழைய தவறுகளையும் மன்னிப்பது, (அவர்கள் கொடுத்த) அனைத்து துன்பங்களையும் மன்னிப்பது என்பது உண்மையிலேயே முஹம்மது (ஸல்) அவர்களின் சுய இலாபத்திற்காகவே இருந்தது. ஆனால் இதற்கு மிகப்பரந்த, மென்மையான உள்ளமும் தேவை.’

அவ்வாறே, **வில்லியம் மோண்ட்கமரி (William Montgomery) என்பவர் Scottish ஐ சார்ந்த மேற்கத்திய வரலாற்றாசிரியர் ஆவார். இவர் இஸ்லாத்திற்கெதிராகவும், கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களுக்கு எதிராகவும் தன் நூலில் மிகக் கடுமையான விஷயங்களை பேசி இருக்கிறார். ஆனால் MUHAMMAD at MEDINA எனும் நூலில் இவ்வாறு எழுதுகிறார்:** ‘மக்கத்து தலைவர்கள் முஸ்லிம்களாக ஆக வேண்டும் என்று அவர்கள் கட்டாயப்படுத்தப்படவில்லை. இந்த தலைவர்களும் மற்ற எவ்வளவோ மக்களும் குஃப்ரில்தான் நிலைத்திருந்தார்கள். இந்த அனைத்தையும் விட மிகப் பெரிய விஷயம் என்னவென்றால் அது முஹம்மது (ஸல்) அவர்கள் தம் தலைமையில் அந்த ஒற்றுமையை தாங்கிப்பிடித்தார்கள். உங்களுடன் நீதியோடுதான் நடந்து கொள்ளப்படுகிறது என்று ஏறக்குறைய அனைத்து மக்களுக்கும் உணரச்

செய்தார்கள். இந்த விஷயம் இஸ்லாமிய சமூகத்தில் சமத்துவம், நிம்மதி மற்றும் உத்வேகம் ஆகிய உணர்வுகளை இன்னும் அதிகமாக்கியது.'

பிறகு, **அமெரிக்காவைச் சார்ந்த ஆர்த்தர் கில்மன் (Arthur Gilman) என்ற மேற்கத்திய வரலாற்றாசிரியர் ஒருவர் மக்கா வெற்றியைப் பற்றி குறிப்பிட்டவாறு தன் நூலில் இவ்வாறு எழுதுகிறார்:** 'கடந்த காலங்களில் மக்காவாசிகள் செய்த அநீதிகள் நினைவுக்கு வந்து அது முஹம்மத் (ஸல்) அவர்களை பழிவாங்க தூண்டி இருக்கலாம்! ஆனால் அவர்கள் தம் படையினரிடம் எவ்வகையான இரத்தம் சிந்துதலும் இருக்கக் கூடாது என்று தடை செய்திருந்தார்கள். அவர்களின் இவ்விஷயம் மிகவும் புகழத்தக்கதாக உள்ளது. பணிவையும், இறைவனுக்கு நன்றி செலுத்துவதையும் எல்லா சாத்தியமான வழிமுறைகளின் மூலமாகவும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள்….. பல்வேறு சந்தர்ப்பங்களில் மிகவும் மிருகத்தனமாக முறையில் நடந்து கொண்ட 10 அல்லது 12 பேருக்கு தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அவர்களுள் நான்கு பேருக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டது. ஆனால், இந்த நடைமுறையை நான் மற்ற வெற்றியாளர்களின் நடைமுறையோடு ஒப்பிட்டு பார்க்கும்போது இது மிகவும் அதிக மனிதத் தன்மையுடன் இருப்பதாகக் கருதுகிறேன்….. 1099 ஆம் ஆண்டில் ஜெருசேலம் கைப்பற்றப்பட்டபோது 70 ஆயிரம் முஸ்லிம் ஆண்களும் பெண்களும், ஆதரவற்ற குழந்தைகளும் அப்போது மரணத்தின் குழியில் தள்ளப்பட்டார்கள். அதேபோன்று 1874 இல் ஆப்பிரிக்காவில் கோல்ட் கோஸ்டில் (அதாவது கானாவில்) ஒரு தலைநகரம் எரிக்கப்பட்டது. சிலுவைவாசிகளின் இந்த அக்கிரமமான நடைமுறையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது முஹம்மது (ஸல்) அவர்களின் வெற்றி உண்மையிலேயே மார்க்கத்தின் வெற்றியாக இருந்ததேயொழிய அரசியல் ரீதியான வெற்றியாக இருக்கவில்லை. அவர்கள் எல்லா விதத்திலும் தம் தனிப்பட்ட கண்ணியம் குறித்த விஷயங்களை மறுத்தார்கள். அரசாங்க பாவனைகளின் அனைத்து வழிமுறைகளையும் விட்டு தவிர்ந்து கொண்டார்கள். மக்காவின் ஆணவம் கொண்ட அனைத்து தலைவர்களும் அவர்களுக்கு முன் கொண்டுவரப்பட்டபோது, நீங்கள் என்னிடமிருந்து இன்று எதை எதிர்பார்க்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், தாராள மனம் கொண்ட எங்களது சகோதரரே! கருணை எதிர்பார்க்கிறோம் என்று கூறினார்கள். அதைக் கேட்ட முஹம்மது (ஸல்) அவர்கள், அப்படி என்றால் அவ்வாறே ஆகட்டும்! நீங்கள் அனைவரும் சுதந்திரமானவர்கள் ஆவீர்கள் என்று கூறினார்கள்.'

பிறகு, **ரூத் கிரன்ஸ்டன் (Ruth Cranston) என்ற மேற்கத்திய வரலாற்று ஆசிரியை ஒருவர். இவரும் அமெரிக்காவைச் சார்ந்தவர்தான். அவர் இவ்வாறு எழுதுகிறார்:** '630 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஒரு நாள் என்ன நிகழ்ந்தது என்றால், 10 ஆண்டுகளுக்கு முன்பு கற்களால் அடித்து இந்த நகரத்திலிருந்து வெளியேற்றப்பட்டு கேலிக்கு ஆளாக்கப்பட்ட அந்த மனிதர், இப்போது தனது பத்தாயிரம் அனுபவமிக்க வீரர்களுடன் மக்கா நகரத்திற்குள் நுழைகிறார். யாரையும் கொல்ல வேண்டாம் என்றும், நகரவாசிகளிடம் இரக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் கட்டளையிடுகிறார். அவர் முஹம்மது (ஸல்) ஆவார்கள்.'

பிறகு, **பிரிட்டனைச் சேர்ந்த கரேன் ஆர்ம்ஸ்ட்ராங் (Karen Armstrong) எனும் ஒரு நல்ல மேற்கத்திய வரலாற்றாசிரியை ஒருவர் - இவர் பொதுவாக மிகவும் நீதியுடன் எழுதுபவர். அவர் தன் நூலில் இவ்வாறு எழுதுகிறார்:** 'முஹம்மது (ஸல்)

அவர்களுக்கு இரத்தம் சிந்த வைப்பதன் மூலமாக பழிவாங்கும் எண்ணம் எதுவும் இருக்கவில்லை! இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும்படி யாரும் கட்டாயப்படுத்தப்படவில்லை. எவர் மீதும் எந்த அழுத்தமும் கொடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. குறைஷிகளைத் துன்புறுத்த வேண்டும் என்பதற்காக முஹம்மது (ஸல்) அவர்கள் மக்காவிற்கு வரவில்லை. மாறாக, அம்மக்களுக்கு உதவாததாக நிரூபணமான அந்த மதத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக வந்தார்கள். மக்கா வெற்றியின் மூலம் முஹம்மது (ஸல்) அவர்கள் நுபுவ்வத்துடைய தம் வாதத்தின் உண்மையை நிரூபித்தார்கள். எவ்வித இரத்தம் சிந்துதலும் இல்லாமல் இந்த வெற்றி கிடைத்தது. முஹம்மது (ஸல்) அவர்களின் அமைதிக் கொள்கை வெற்றி பெற்றது. சில ஆண்டுகளிலேயே மக்காவில் சிலை வணக்கம் முடிவுக்கு வந்தது. இக்ரிமா, சுஹைல் போன்ற மிகக் கடுமையான எதிரிகள் கூட கலப்பற்ற, உத்வேகம் நிறைந்த முஸ்லிம்களாக மாறிப்போனார்கள்.'

**மக்கா வெற்றி தொடர்பான விபரத்தில் அப்துல்லாஹ் பின் அபீ சர்ஹ் என்பவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட குறிப்பும் காணப்படுகிறது.** இவர் ஏற்கனவே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டிருந்தார்; வஹீயை எழுதக்கூடியவராகவும் இருந்தார். ஆனால் அவருக்கு தடுமாற்றம் ஏற்பட்டு முர்தத் ஆகி மக்காவுக்குச் சென்று விட்டார். மக்கா வெற்றியின்போது எவர்களுக்கெல்லாம் மரண தண்டனை விதிக்கப்பட்டதோ அவர்களுள் இவரும் ஒருவர் ஆவார் என்று கூறப்படுகிறது. மக்கா வெற்றி கொள்ளப்பட்டபோது இவருக்கு ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் அடைக்கலம் கொடுத்திருந்தார்கள். அவர்களின் வீட்டில் இவர் ஒளிந்து கொண்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் மக்களிடம் பைஅத் வாங்கிக் கொண்டிருக்கும்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இவரை அழைத்து வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் சிறிது நேரம் தாமதித்து விட்டு பின்னர் அவரது பைஅத்தை ஏற்றுக் கொண்டார்கள். பிற்காலத்தில் இவர் எகிப்தின் ஆளுநராகவும் ஆனார். ஆப்பிரிக்காவின் ஒரு பகுதியை வெற்றி பெறக் கூடியவராகவும் இருந்தார். இவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்குப் பால்குடிச் சகோதரராக இருந்த போதிலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத்திற்குப் பிறகு இவர் குழப்பங்களிலிருந்து விலகியே இருந்தார். தனது கடைசிச் செயல் தொழுகையாக இருக்க வேண்டும் என்று துஆ செய்ததாகக் கூறப்படுகிறது. அதன்படி, ஒரு நாள் காலைத் தொழுகையின்போது சலாம் கூறத் தொடங்கியபோது மரணமடைந்தார்.

பிறகு, **அபூ ஜஹ்ல் -ன் மகன் இக்ரிமா அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட குறிப்பும் காணக்கிடைக்கிறது.** தமக்கு நிச்சயமாக தண்டனை வழங்கப்படும் என்று அவர் உறுதி கொண்டிருந்தார். எனவே, அவர் கடல் மார்க்கமாக ஏமன் செல்ல தீர்மானித்திருந்தார். அவரது மனைவி உம்மே ஹக்கீம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். அவர் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, இக்ரிமாவை கொல்ல தாங்கள் உத்தரவிடுவீர்கள் என்று அவர் அஞ்சுகிறார்; தாங்கள் அவருக்கு அடைக்கலம் அளியுங்கள் என்று வேண்டினார். இதைக் கேட்டவுடன் அன்னார், அவர் அடைக்கலத்தில் இருக்கிறார் என்று கூறினார்கள். ஆகவே இக்ரிமானின் மனைவி அவரிடம் சென்று, மக்களில் அனைவரையும் இணைப்பவர், மக்களில் அனைவரையும் விட சிறந்தவர், மக்களில் அனைவரையும் விட நன்மையை விரும்புபவர் ஆகிய ஒருவரிடமிருந்து நான் உங்களிடம்

வந்திருக்கிறேன். நீங்கள் உங்கள் உயிரை அழிவில் ஆழ்த்திக் கொள்ளாதீர்கள். ஏனெனில், நான் உங்களுக்காகப் பாதுகாப்பு தேடியிருக்கிறேன் என்று கூறினார். இதைக்கேட்டு இக்ரிமா தம் மனைவியுடன் திரும்பி வந்தார்; அவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

பிறகு, **ஹப்பார் பின் அஸ்வத் என்பவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது பற்றிய குறிப்பும் காணக்கிடைக்கிறது.** மரணதண்டனை வழங்கப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டவர்களுள் பெருமானார் (ஸல்) அவர்களின் மகள் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களின் மரணத்திற்கு காரணமாக இருந்த ஹப்பார் என்வரும் ஒருவராவார். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் அமர்ந்து சென்ற ஒட்டகத்தின் தொட்டில் கயிற்றை அவர் துண்டித்ததால் அவர்கள் அதிலிருந்து கீழே விழுந்தார்கள். அதனால் அவர்களின் கர்ப்பம் கலைந்து சில காலங்களுக்குப் பிறகு அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். ஹப்பாருடைய மற்ற குற்றங்களுடன் இந்த குற்றமும் சேர்ந்து கொண்டது. ஆகவே, மரணதண்டனைக்குரியவராக இருந்தார். இவர் ஈரானுக்கு தப்பிச் சென்று விட்டார். பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி மன்னிப்பு கேட்டபோது அன்னார் இவரை மன்னித்து விட்டார்கள்.

அதேபோன்று, **கஅப் பின் ஸுஹைர் என்பவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது பற்றிய குறிப்பும் காணக்கிடைக்கிறது.** இவரும் பெருமானார் (ஸல்) அவர்களின் கடும் எதிரியாக இருந்தார். இவர் கவிஞர் ஆவார். ஆகவே, தம் கவிதைகளில் இஸ்லாத்திற்கெதிராகவும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கெதிராகவும் விஷமத்தனத்தை பரப்பிக் கொண்டிருந்தார். இவர், பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி தாம் யாரென்பதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் கஅப் பின் ஸுஹைர் (ஆகிய தம) க்காக மன்னிப்பு கோரினார். அன்னார் அவரை மன்னித்து விட்டதாக கூறிய போது, நானே கஅப் பின் ஸுஹைர் என்றார். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் அவரை மன்னித்தார்கள். அப்போது அவர் அன்னாரைக் குறித்து மகத்தான கவிதைகளை பாடினார். அன்னார் அவருக்குத் தம் போர்வையை வழங்கினார்கள். அதன் காரணமாக அந்தக் கவிதை 'கஸீதா புர்தா' (போர்வைக் கவிதை) என்று அழைக்கப்படுகிறது.

வரலாற்றில் கஸீதா புர்தா என்ற பெயரில் மற்றொரு கவிதையும் மிகவும் பிரபல்யமாக உள்ளது. அது இமாம் ஷர்ஃபுத்தீன் பூஸீரி அவர்களின் கவிதை ஆகும். இது கஸீதா புர்தா என்று ஏன் அழைக்கப்படுகிறது என்றால், இவர் பெருமானார் (ஸல்)அவர்களின் மகத்துவத்தில் இந்தக் கவிதையை எழுதியபோது பெருமானார் (ஸல்)அவர்கள் கனவில் இவர் மீது தமது அருளுக்குரிய போர்வையைப் போர்த்தினார்கள். அது இவர் கண் விழித்த பிறகும் இவருடைய தோளில் இருந்தது. இமாம் பூஸீரி அவர்கள் மாற்றுத்திறனாளி என்றும் இந்தப் போர்வையின் அருளால் குணமடைந்தார் என்றும் கூறப்படுகிறது. எவ்வாறிருப்பினும், இது ஒரு கதையாக எடுத்துரைக்கப்படுகிறது. இத்தகைய கதைகளும் உள்ளன.

எவ்வாறிருப்பினும், இன்னும் சில கடும் எதிரிகள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட குறிப்புகளும் அவர்களுக்கு எவ்வாறு மன்னிப்பு கிடைத்தது என்பது பற்றிய குறிப்புகளும் உள்ளன. அந்தக் குறிப்புக்களை நான் இனி வரக்கூடிய காலத்தில் எடுத்துரைப்பேன்.

அடுத்த வெள்ளிக்கிழமையிலிருந்து இன்ஷா அல்லாஹ், அஹ்மதிய்யா ஜமாஅத் பிரிட்டனுடைய ஆண்டு மாநாடும் தொடங்குகிறது. அதற்காகவும் துஆ

செய்யுங்கள். அல்லாஹ் தனது அருளால் மாநாட்டை வெற்றி பெறச் செய்வானாக! மேலும், தனது அருளால் சிறப்பானதாக்குவானாக! விஷமத்தனம், தீங்கு செய்யக் கூடிய ஒவ்வொருவரிடமிருந்தும் அல்லது தீங்கு விளைவிக்க எண்ணம் கொண்டிருக்கும் ஒவ்வொரு நபரின் தீங்கிலிருந்தும் அல்லாஹ் பாதுகாப்பானாக! உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் வருகை தரும் விருந்தினர்களை அல்லாஹ் பாதுகாப்பாக கொண்டு வருவானாக; இங்கும் அவர்களை எல்லா வகையிலும் தனது பாதுகாப்பில் வைத்திருப்பானாக! மாநாட்டிற்கு வருகை தரும் விருந்தினர்கள் மக்களுடைய தனிப்பட்ட விருந்தினர்களாக இருந்தாலும் சரி அல்லது ஜமாஅத் ஏற்பாட்டின் கீழ் வரும் விருந்தினார்களாக இருந்தாலும் சரி! அவர்களுக்கு விருந்தோம்பல் துறையின் கீழ் ஏற்பாடு செய்யப்படுகிறது. அவர்களுக்கான விருந்தோம்பலின் உரிமையை நிறைவேற்றக்கூடிய நல்வாய்ப்பை விருந்தோம்பல் செய்யும் ஒவ்வொருவருக்கும் அல்லாஹ் வழங்குவானாக!

ஊழியர்கள் ஆண்டு மாநாட்டில் வேலை செய்வதற்கு உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் தங்களை முன்னிறுத்துகிறார்கள். மிகவும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும், மென்மையுடனும், இனிமையான பண்புடமும் விருந்தினர்களுக்கு சேவை செய்யக்கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் வழங்குவானாக!.

சில சமயங்களில் வேலைப்பளு மற்றும் தூக்கமின்மை காரணமாக சில ஊழியர்களின் இனிமையான சுபாவம் பாதிக்கப்படுகிறது. ஆனால் எந்தத் துறையில் பணியாற்றினாலும் ஒவ்வொரு ஊழியரும், அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு சேவை செய்யும் நல்வாய்ப்பை வழங்கியுள்ளான்; அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளான். எனவே, இதற்காக நாம் நம்மை எல்லா விதமான தியாகத்திற்காகவும் ஆயத்தமாக வைத்திருக்க வேண்டும் என்றும், எந்நிலையிலும் முகத்தில் புன்னகையை வைத்திருப்போம் என்றும் எண்ணம் கொண்டவாறு இந்நாட்களை கழிக்க வேண்டும்.

அதிகாரிகளாக இருந்தாலும் ஊழியர்களாக இருந்தாலும், இளைஞர்களாக இருந்தாலும் இளம் பெண்களாக இருந்தாலும், ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும், எந்த துறையில் தொண்டாற்றினாலும்! அனைவரும் இன்முகத்துடன் தம் பணியை நிறைவேற்ற வேண்டும். அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

ஆனால் அத்துடனே, எந்த ஒரு நபருக்கும் எவ்வித விஷமத்தனமும் செய்ய துணிவு பிறக்காத வகையில் ஒவ்வொருவரின் மீதும் ஓர் ஆழமான பார்வையும் வைத்திருக்க வேண்டும். அழகிய முறையில் தொண்டாற்றக் கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் அனைத்து பணியாளர்களுக்கும் வழங்குவானாக! அவர்கள் அல்லாஹ்வின் அருள்களைப் பெறக்கூடியவர்களாக ஆவார்களாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ
وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی
الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)